# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 19. வழிபாட்டுத் தலங்கள்- பொதுவானது

வழிபாட்டுத் தலங்களான விகாரைகள், கோவில்கள், தேவாலயங்கள், மற்றும் மசூதிகள் ஆகியவை அடியவர்களால் தரிசிக்கப்படுவன. அனைத்துவிதமான சமய ஒன்றுகூடல்களும் மறு அறிவித்தல் வரை அனுமதிக்கப்படமாட்டது.

**பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்**

*சகல சமய நிகழ்வுகளும் கோவிட் 19 ஐ தடுப்பதற்கான பொது வழிகாட்டல்களுக்கு அமைவாகவே நடாத்தப்படல் வேண்டும்.*

**ஏற்பாட்டாளர்/ தர்மகர்த்தா/பணியாளர்**

- வழிபாட்டிடங்களில் திருமணம் தவிர (பார்க்க - திருமணத்தில் மேற்கொள்ளப்பட்டவேண்டிய வழிகாட்டல்கள்)ஏனைய கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் ஒன்றுகூடுவதும் அனுமதிக்கப்படவில்லை. ஐந்து நபர்களுக்கு மேற்பட்டவர்கள் கூடுகின்ற விசேட திருவிழாக்களோ அல்லது சமயரீதியில்மக்கள்கூடும் (பெரகராக்கள், ஆராதனைகள், கூட்டங்கள், குழுவாக இருந்து புனித குரானை ஓதிமுடித்தல், ஒன்றாக இருந்து உணவருந்துதல் முதலான) பிரார்த்தனை நிகழ்வுகளோ வழிபாட்டிடங்களின் வளாகங்களிலோ அல்லது தனியார் வளாககங்களிலோ நடாத்தப்படக்கூடாது. ஐந்து அடியவர்களுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களிலும் ஆட்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளியானது பேணப்படுதலை உறுதிப்படுத்த வேண்டும். நுழைவாயிலில் கைகழுவும் வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன் மக்கள் ஒழுங்காக நுழைவதற்கு உதவும் வகையில் ஒரே ஒரு நுழைவாயிலை மட்டும் உபயோகிக்கவும்.
- தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் மறு அறிவித்தல்வரை சகல வழிபாட்டிடங்களும் மூடப்பட்டிருக்க வேண்டும்.
- சங்கைக்குரிய பிக்குமார்/குருக்கள்/ஆண்டகை/அருட்சகோதரர்/அருட்சகோதரி/மௌலவி அல்லது எந்தப் பணியாளர் ஆகிலும் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது கோவிட் 19 ற்குரிய நோய் அறிகுறிகளைக் கொண்டிருந்தாலோ மருத்துவ ஆலோசனையினைப் பெற வேண்டும். அத்துடன் அவ்வாறானவர்கள் பொதுமக்களுடன் பழகக் கூடாது.
- தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் வழிபாட்டிடங்களில் நுழையும் பொதுமக்களது எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூர் காவல்துறை நிலையத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.
- வழமையான கூட்டுப் பிரார்த்தனைகள் மறு அறிவித்தல் வரை இடம்பெறக் கூடாது.
- அனைத்து பக்தர்களும் வளாகத்திற்குள் முகக்கவசம் அணிய வேண்டும்
- மதகுருமார்களும் பொதுமக்களுடன் சந்திக்கும் போது முகமூடி அணிய வேண்டும்
- அடியார்கள் தமது வீடுகளில் இருந்தவாறே பிரார்த்தனைகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும்.
- சாத்தியமான சந்தர்ப்பங்களில் அடியார்கள் பங்குபற்றுவதற்காக கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகள் நிகழ்நிலை (online) மூலமாக ஒளிபரப்பப்படலாம்.
- ஆலயங்களில் தானம் வழங்குதலானது மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான குடும்ப உறுப்பினர்களால் வழங்கப்படல் வேண்டும். அத்துடன் நபர்களுக்கு மத்தியில் இடைவெளி பேணியவாறு மட்டுப்படுத்தப்பட்டவர்களது பங்களிப்புடன் குறுகிய ஆராதனை மேற்கொள்ளப்படலாம்.
- சிறப்புமதநடவடிக்கைகள், பிரித், பண (Bana), நவநாள், இந்து கடவுள்களுக்கு யாகங்கள், மந்திரங்கள் செய்வது அனுமதிக்கப்படும் வரை தவிர்க்கப்படவேண்டும், ஏனெனில் இவை மக்கள்எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் உணவுப்பொருட்களைப் பகிர்வதற்கும் வழிவகுக்கும். வளாகத்திலோ அல்லது வெளியேயோ பக்தர்களிடையே உணவு பகிரப்படக்கூடாது, மேலும் புனிதநீர், புனிதமான / ஆசீர்வதிக்கப்பட்ட உணவு, கஞ்சி போன்றவற்றை விநியோகிப்பதைத் தவிர்க்கவேண்டும். பக்தர்களால் சேகரிக்கக்கூடிய புனிதநீர் / புனித உணவை வளாகத்திற்கு வெளியே அனுமதிக்க வேண்டாம்..

- தேவாலயத்தில் பாதிரியார் தேவ நற்கருணை வழங்கும்போது, நாக்கில்வைப்பதற்குப்பதிலாக, கைகளில் வழங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். பாதிரியார் தேவநற்கருணை வழங்கும்போது முகக்கவசம்அணிந்திருக்கவேண்டும். தேவநற்கருணை வழிபாட்டின்போது வைன் பகிர்வது நடைமுறையில் இருக்கக்கூடாது.
- கோவில், தேவாலயம், மசூதி அல்லது கோயில் ஆகியவை சிறிய குழுக்கள் கூட சந்திக்கும் இடமாக இருக்கக்கூடாது என்று கடுமையாக அறிவுறுத்தப்பட வேண்டும்.
- தலைமை மதகுருமார்களின் கூட்டங்களில் சமூக இடைவெளி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது தலைமை குருக்கள் / கடமையிலிருப்பவரின் பொறுப்பு ஆகும்.

**அடியவர்களுக்கு**

1. உங்களது சொந்தப் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு சமய அனுட்டானங்களை வீடுகளிலே மேற்கொள்ளுங்கள்.
2. கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளில் தொலைக்காட்சி வழியாக அல்லது வசதி இருக்குமானால் இணையத்தின் ஊடாக இணைந்து கொள்ளலாம்
3. அன்னதானம் கொடுக்கும் பகுதிகளுக்குள் நுழையும்போது எப்போதும் கைகளைக் கழுவுங்கள்.ஆலயங்களில் தானம் வழங்குதலானது மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான குடும்ப உறுப்பினர்களால் குறுகிய நேரத்தினுள் வழங்கப்படல் வேண்டும். அத்துடன் நபர்களுக்கு மத்தியில் இடைவெளி பேணியவாறு மட்டுப்படுத்தப்பட்டவர்களது பங்களிப்புடன் குறுகிய ஆராதனை மேற்கொள்ளப்படலாம்.தேவைப்படின் இருவர் தானம் வழங்குவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், மத குருமார்களது எண்ணிக்கையின் அடிப்படையில் ஐந்து மத குருமாருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மேலதிகமான நபர்கள் அனுமதிக்கப்படலாம்.
4. நீங்கள் ஒரு மதம் சார்ந்த இடத்திற்கு நுழைகிறீர்கள் என்றால் எப்போதும் முகக்கவசம் அணியுங்கள், அனைவருடனும் ஒரு மீட்டர் இடைவெளியைப் பராமரிக்கவும், கைகளை கழுவாமல் முகத்தைத் தொடாதீர்கள்
5. நீங்கள் ஏதேனும் பிரசாதம் எடுத்துக்கொண்டால், அவற்றை எப்போதும் உங்கள் சொந்த கொள்கலனில் எடுத்துச் சென்று, வீடு திரும்பியதும் சோப்பு மற்றும் தண்ணீரில் கொள்கலனை நன்கு கழுவுங்கள்.
6. திருப்பலியில் தேவ நற்கருணை தங்கள்கைகளில் பெறவேண்டும், மேலும் உடனடியாகபயபக்தியுடன் விலகி, நகர வேண்டும். இந்த செயல்பாட்டின் போது அடியவர் வேறு எந்த மேற்பரப்பையும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.
7. மத இடத்தில் குறைந்தபட்ச நேரத்தை செலவிடுங்கள். மக்களுடன் அரட்டையடித்தும் வளாகத்தில் சுற்றவும் வேண்டாம்
8. நேரடியான உடல் தொடுகைகளைத் தவிர்க்கும் கலாசார மற்றும் சமய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைகளில் முகமன் செலுத்தும் முறைகளான கைகூப்புதல், கையசைத்தல், தலையசைத்தல் அல்லது கையை இதயத்தின் மீது வைத்தல் ஆகியவற்றைப் பயன்படுத்துக.
9. தற்போதுள்ள சூழ்நிலைகளில் தல யாத்திரிரை மற்றும் குழுக்களாக சமயத் தலங்களுக்கு செல்லல் ஆகியன கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். பதிலாக மறு அறிவித்தல் வரை தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் உங்களுக்கு அருகாமையில் உள்ள வழிபாட்டிடத்திற்கு உங்களது குடும்ப உறுப்பினர்களுடன் மட்டும் செல்லுங்கள்.

அறிவுறுத்தும் முறைகள்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020

- நுழையும் மற்றும் வெளியேறும் இடங்களில் சுவரொட்டிகள்.
- ஊடக அறிக்கை.
- சமூக ஊடக பதிவுகள்.
- இலங்கையில் உள்ள சகல மதத்தலைவர்களுக்கும் கடிதம் அனுப்புதல்.
- வழிபாட்டிடங்களில் அடியவர்களது எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்த உதவுமாறு சட்ட அமுலாக்கத்துறையினருக்கு அறிவித்தல்.

**மேலதிக கருத்துகள்:**

*சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட கீழ்க்காணும் வழிகாட்டல்களையும் வாசித்து அறிக:*

*1) புனித வைகாசி விசாக (வெசாக்) பண்டிகைக் காலத்தில் கோவிட் 19 திடீர் நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவத்கு எடுக்கவேண்டிய முற்தடுப்பு நடவடிக்கைகள்.*

*2) புனித ரமழான் நோன்பு காலத்தில் கோவிட் -19 இனைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டிய முற்தடுப்பு நடவடிக்கைகள்.*




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.



28.06.2020